2010 ஏப்ரல் 30]

சொல்லியிருக்கிறார்கள். 2007–2008, 2008–2009, 2009–2010, இந்த மூன்று ஆண்டுகளிலே மட்டும் கிட்டத்தட்ட 32,554 எக்டர் நிலங்களிலே, அதாவது 80,410 ஏக்கர் தனியார் நிலங்களிலே மரம் வளர்த்து, கிட்டத்தட்ட 56,132 விவசாயிகள் பயன்பெற்று, தலைவர் கலைஞர் அவர்களை, அவர்களெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். கட்டாந்தரையாக இருந்த எங்களது நிலங்களில் அவர்களே, அரசே நட்டுக் கொடுத்து எங்களது பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

130—

துறைமுகம்

***607—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறையில் உள்ள துறைமுகம் இயங்காத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சீரமைத்து மீண்டும் கப்பல் போக்குவரத்து துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறை துறைமுகத்தில் கப்பல்கள் நிறுத்துவதற்குத் தேவையான ஆழம் இல்லாததால் தற்போது துறைமுகம் இயங்காமல் உள்ளதை அரசு அறியும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) இத்துறைமுகத்தை சீரமைக்கப் பெருமளவு நிதி தேவைப்படுவதாலும், அருகிலேயே நாகப்பட்டினம் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்கள் அமைந்துள்ளதாலும், தோப்புத்துறை துறைமுகத்தினை சீரமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோப்புத்துறைத் துறைமுகம் 1948 ஆம் ஆண்டு வரைக்கும் மிகச் சிறப்பாக இயங்கியிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், இலங்கை, பர்மா, இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இப்பொழுதுகூட சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 8 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இந்தத் துறைமுகம் இருக்கிறது. இங்கே தூர் வாரினாலே சரியாகப் போய்விடும். அதனால் இதைத் தூர் வாரி, அகலப்படுத்தி, மீண்டும் அங்கே கப்பல் போக்குவரத்து நடைபெறுவதற்கு உள்ள வழிவகை செய்யப்படுமா? அதேபோல, அங்கே Customs Office எல்லாம் இன்றைக்கு வரைக்கும் இருக்கிறது. கிட்டங்கிகள் எல்லாம் இருக்கின்றன. சாலைப் போக்குவரத்து வசதிகள் எல்லாம் நன்றாக இருக்கின்றன. அதனாலே மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 1948 ஆம் ஆண்டு வரை அதிலே துறைமுகம் இயங்கி வந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஓரளவு உண்மைதான். அந்த அளவுக்கு கடந்த காலங்களில் இயந்திரம் பொருத்தப்படாத பாய்மரக் கப்பல் போன்ற கப்பல் எளிதாக எந்த இடங்களில் வேண்டுமானாலும் வந்து, செல்வதற்கான வாய்ப்புகள் இருந்தன.

2010 ஏப்ரல் 30]

இயந்திரம் பொருத்திய கப்பல் கரையினுடைய அருகிலே வரவேண்டும் என்று சொன்னால், குறைந்தபட்சம் 10 மீட்டர் ஆழம் தேவை. எனவே, அந்த இடங்களில் 12 கிலோ மீட்டர் வரை, 2, 3, 4, 5 மீட்டர் வரைதான் ஆழம் உள்ளது. எனவே, இயந்திரங்கள் பொருத்திய கப்பல்கள் அருகில் வரமுடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எளிதாக, தூர் வாரினால் போதும் என்று சொன்னார்கள். பல கோடி ரூபாய் தேவை. ஏதோ வாய்க்காலைத் தூர் வாருவதைப்போலச் சொல்கிறார். இருந்தாலும், பக்கத்திலே நாகப்பட்டினத்திலும், திருக்கடையூரிலும் துறைமுகங்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வருடைய அரசு வந்த பிறகு பல்வேறு துறைமுகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, தனியாருடைய முதலீட்டோடு அந்தத் துறைமுகங்களெல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பிரச்சினையைப் பொறுத்த அளவில், தற்சமயம் நிதி ஆதாரம் இல்லை. எனவே, அதற்குரிய வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சாலைப் போக்குவரத்து என்பது நெரிசலான காலக்கட்டத்தில் இருக்கிறது. இதுபோன்ற நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்தினால், வருங்காலத்தில் பிரச்சினை இல்லாமல் இருக்கும். அதனால், அதற்கு முன்னுரிமை அளிப்பதற்கும், அதுபோல, இதுபோன்று பயன்படுத்தப்படாமல் இருக்கும் துறைமுகங்களைக் கண்டறிந்து அதை மேம்பாடு செய்வதற்கும் வருங்காலத்தில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன் கடந்த நான்கு ஆண்டு காலமாக. பல்வேறு புதிய துறைமுகங்கள்

குறித்து 5 ஆம் தேதி நடைபெறவிருக்கும் மானியக் கோரிக்கையில் விளக்கமாகக் குறிப்பிட இருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது பற்றி துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் சிலைக்கு சேதம் ஏற்படுத்த நடந்த முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் பெருமகனார் சிலையை 50–க்கும் மேற்பட்டவர்கள் தாக்க முயற்சி மேற்கொள்ளுகிறபோது, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்துள்ளார்கள். இதுபோன்று தேசியத் தலைவர்களுடைய சிலைகளை, சில தீய சக்திகளின் ஊடுருவல் காரணமாகத் தாக்குவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, கடுமையான தண்டனைகள் என்ற அடிப்படையில் பல்வேறு தண்டனைகள் வழங்கப்படுவதோடு, தேசியத் தலைவர்களுடைய சிலைகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று உங்கள்மூலம் வலியுறுத்தி, அமர்கிறேன்.

(ஆ) மகாபலிபுரம், வன்னியர் இளைஞர் பெருவிழாவிற்கு வந்தவர்கள் வழிமறித்துத் தாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.